முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (18.012026) துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெரு மற்றும் அண்ணா பிள்ளை தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம், 700 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், சமுதாய நலக்கூடம். மாநகராட்சி அச்சகம் மற்றும் விளையாட்டுத் திடல் என "ஒருங்கிணைந்த வளாகம் "கட்டுமானப் பணிகளை துரிதபடுத்தும் வகையில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தி, அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார். இந்த ஆய்வின்போது சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மாநகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், தலைமைப் பொறியாளர்கள் ராதாகிருஷ்ணன், தமிழ்ச்செல்வன் (மி.வா.). கண்காணிப்புப் பொறியாளர்கள் பாலமுருகன் (சி.எம்.டி.ஏ.), ராஜன்பாபு (சி.எம்.டி.ஏ.) மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

"கார் உள்ளளவும் கடல் நீர் உள்ளளவும்" முதல்வர் பெயர் சொல்லும் வகையில்

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் - பல்வேறு பணிகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஜன.19–

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் வட சென்னை வளர்ச்சி திட்டம் என்பது காலம் காலமாக, "கார் உள்ளளவும் கடல் நீர் உள்ளளவும்" முதலமைச்சர் அவர்களின் பெயரும் புகழும் சொல்லும் வகையில் செயல்படுத்தப்படும் என்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

நேற்று (18.01.2026) துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெரு மற்றும் அண்ணா பிள்ளை தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம், 700 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், சமுதாய நலக்கூடம், மாநகராட்சி அச்சகம் மற்றும் விளையாட்டுத் திடல் என "ஒருங்கிணைந்த வளாகம் " கட்டுமானப் பணிகளை துரிதப்படுத்தும் வகையில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தி, அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, இராயபுரம் சட்டமன்ற தொகுதியில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் மூலக் கொத்தளம் விளையாட்டு அரங்கத்தின் பணிகளையும் புதிய சமுதாய நலக்கூடத்தின் கட்டுமான பணிகளையும் துரிதப்படுத்தும் வகையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினார்.

பேட்டி!

பின்னர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தேர்தல் அறிவிப்புக்கு முன்பாக 40 திட்டங்களை மக்களுடைய பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று முதல்வர் அவர்கள் உத்தரவிட்டதின் பேரில், காலை முதல் இரவு வரை இந்தப் பணிகளிலேயே முழுமையாக ஈடுபட்டு செயல்பட்டு வருகிறோம். இந்த அணுகுமுறையில், பணிகளுக்குத் தேவையான மின்சாரம், குடிநீர், கழிவுநீர் துறை உள்ளிட்ட அனைத்து துறைகளுடனும் கலந்தாலோசனை நடத்தி வருகின்றோம்.

அந்த வகையில், இன்று காலை ஒரே வளாகத்திற்குள் ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக உள்ள விளையாட்டு திடல், அரசு அச்சகத்திற்கான நவீனமயமாக்கப்பட்ட கட்டிடம், திருமண மண்டபம், டயாலிசிஸ் (இரத்த சுத்திகரிப்பு) நிலையம், மேலும் 700 குடியிருப்புகள் கொண்ட வாழ்வாதாரத் திட்டம் ஆகியவற்றை ஆய்வு செய்தோம். இவை தற்போது சாலையோரங்களில் வசித்து வரும் மக்களுக்கு நிரந்தரமான வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

அதோடு, இந்த திட்டத்தில் கட்டப்பட்டு வரும் விளையாட்டு காம்ப்ளக்ஸ் மற்றும் விளையாட்டு திடலையும் இன்று பார்வையிட்டுள்ளோம். இதனைத் தொடர்ந்து, அருகிலேயே கட்டப்பட்டுள்ள கல்யாண மண்டபத்தையும் பார்வையிட இருக்கின்றோம். முதல்வர் அவர்களின் பொற்கரங்களால், ஸ்டான்லி அரசு மருத்துவமனை அருகில் கட்டி முடிக்கப்பட்ட 770 வீடுகள் பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட இருக்கின்றன. அந்த 770 பயனாளிகளும் சாலையோரங்களில் வசித்து வந்த மக்களாக இருக்க வேண்டும் என்றும், எந்தவிதமான தலையீடும் இன்றி, முழுக்க முழுக்க உண்மையான பயனாளிகள் தேர்வு செய்யப்பட வேண்டும் என்றும் முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார். அந்த வகையில், முதல்வர் அவர்கள் பொங்கல் திருநாளன்று சாலையோரங்களில் வசித்து வந்த குடிசைப் பகுதி மக்களை நேரடியாக சந்தித்து, அவர்களுடைய குறைகளை கேட்டு அறிந்து, அவர்களுக்கு இந்த குடியிருப்புகள் வழங்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

அதே நாளில், மனிதாபிமானத்தோடும் மனிதநேயத்தோடும் மூத்தோர்கள் தங்கி இருக்கும் முதியோர் இல்லத்திற்கு நேரடியாக சென்று ஆய்வு செய்து, அவர்களோடு பொங்கலைக் கொண்டாடியிருக்கிறார். அவர்களுடைய தேவைகளை அறிந்து, சென்னையில் செயல்பட்டு வரும் 57 முதியோர் குடியிருப்புகளையும் மேம்படுத்தவும், அவர்களுக்கு தினசரி வழங்கப்படும் உணவுக்கான தொகையை உயர்த்தவும் முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்.

இந்த வகையில், வடசென்னை வளர்ச்சி திட்டம் என்பது காலம் காலமாக, "கார் உள்ளளவும் கடல் நீர் உள்ளளவும்" முதலமைச்சர் அவர்களின் பெயரும் புகழும் சொல்லும் வகையில் செயல்படுத்தப்படும். இதற்காக எங்களுடைய துறையின் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, துறையின் உறுப்பினர் செயலர் கோ.பிரகாஷ், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா ஒருங்கிணைந்து, இரவு பகல் பாராமல் தொடர்ந்து கண்காணித்து இந்தப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

மேலும் அதிமுக தேர்தல் அறிக்கை குறித்த செய்தியாளர் கேள்விக்கு அமைச்சர் அளித்த பதில்:

அந்த காணொலி வைரலாகச் சென்று கொண்டிருக்கிறது. சிந்தனையில் ஏதாவது இருந்தால்தானே புதிய திட்டங்களை சிந்திக்க முடியும். சிந்தனையில் ஒன்றுமே இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் எதையெல்லாம் முன்னெடுக்கிறதோ, அதையே பின்தொடர்ந்து வந்து, அதில் ஒரு 10 சதவீதம் கூடுதலாக்குவது தான் அவர்களுடைய பணியாக இருக்கிறது. ஆகவே, முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலில்தான் அதிமுகவும் பயணிக்கிறது என்பதை இதிலிருந்து ஏற்றுக் கொள்ளலாம். இவ்வாறு கூறிய அவர், மாடுபிடி வீரர்களுக்கு அரசு பணி என்பது ஏமாற்று வேலை என்ற குற்றச்சாட்டுக்கு அளித்த பதில் வருமாறு:

"சாப்பிடுவதற்கு சாப்பாடு இல்லை" என்ற நிலையில், "மீசைக்கு எதற்கு ஜாம்பவான்" என்று கேட்பது போல, எந்தவிதமான பதவியிலும் இல்லாத அண்ணாமலைக்கு இதுபோன்ற விஷயங்களில் கேள்வி கேட்பதற்கான தகுதி இல்லை.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

திரு.வி.க.நகர் வடக்குப் பகுதி 74வது வட்ட திமுக சார்பில் திராவிட பொங்கல் திருவிழா மற்றும் கோலப் போட்டி மற்றும் விளையாட்டு போட்டிகள் ஏகாங்கிபுரம் முதல் தெரு, அயன்புரம், சென்னை –23–ல் வட்டச் செயலாளர் எஸ்.புஷ்பராஜ் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன், ஆர். ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் பிரியா ஆகியோர் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கினர். இதில் கலாநிதி வீராசாமி எம்.பி., ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. உள்ளிட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழகச் செயல் வீரர்கள் பங்கேற்றனர்.

சேலம் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட 4 தொகுதிகளிலும் தமிழர் திருநாள் பொங்கல் திருநாளையொட்டியும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளையொட்டியும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான இரா.இராஜேந்திரன் பரிசுகளை வழங்கினார்.

சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட 4 தொகுதிகளிலும்

துணை முதல்வர் பிறந்த நாளையொட்டி 1 லட்சம் பேருக்கு பரிசுகள்!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்!

சேலம். ஜன.19

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டியும் துணை முதலமைச்சர் பிறந்தநாளையொட்டியும் சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் நடத்தப்பட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மற்றும் கலந்து கொண்ட சுமார் ஒரு லட்சம் பேருக்கு மாவட்ட செயலாளரும் சுற்றுலாத் துறை அமைச்சருமான இரா.இராஜேந்திரன் பரிசுகளை வழங்கி பாராட்டு தெரிவித்தார்

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டியும் துணை முதலமைச்சர் அவர்கள் பிறந்த நாளையொட்டியும் சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட வடக்கு, தெற்கு, மேற்கு, மற்றும் ஓமலூர் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளில் கிளை வாரியாகவும் பகுதி.ஒன்றியம் மற்றும் பேரூர் வாரியாகவும் கடந்த 15 நாட்களாக பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

குறிப்பாக கிரிக்கெட், கூடைப்பந்து, கைபந்து, கபடி, கோ கோ, உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு இந்த போட்டிகளில் வெற்றி பெற்ற அணியினருக்கு அந்தெந்த பகுதியில் நடைபெற்ற விழாக்களில் மாவட்ட செயலாளரும் சுற்றுலாத் துறை அமைச்சருமான இரா. இராஜேந்திரன் கலந்துகொண்டு முதல் மூன்று இடங்களைப் பிடித்த அணியினருக்கு பரிசு கோப்பை மற்றும் ரொக்க தொகைகளை வழங்கி தமது பராட்டுகளை தெரிவித்தார்..

இதேபோன்று போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஆறுதல் பரிசுகளையும் அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்.

இதேபோன்று அனைத்து பகுதிகளிலும் மகளிர்க்காக நடத்தப்பட்ட கோலப் போட்டியில் வெற்றி பெற்ற மகளிர்க்கும் கலந்து கொண்ட அனைத்து பெண்களுக்கும் பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் கார்த்திகேயன் தொகுதி பார்வையாளர்கள் பார்.இளங்கோவன், ஈ.ஜி.சுகவனம், ராஜசேகர் மற்றும் மருத்துவர் விவேக் மற்றும் பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள் உள்ளிட்டவர்களும் கழக நிர்வாகிகளும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

பிப்ரவரி மாதம் முழுவதும் கழகத் தலைவர் பிறந்தநாளைக் கொண்டாடுவோம்! ஜன.25 காஞ்சிபுரத்தில்

வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் சிறப்புரையாற்றுகிறார் - பெருந்திரளாகப் பங்கேற்போம்!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! கழகத்தினருக்கு க.சுந்தர் எம்.எல்.ஏ, வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜன.19,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச. இனியரசு தலைமையில் நேற்று நடைபெற்றது.

தொடக்கத்தில் மாவட்டக் கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

இக் கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள் ஓ.எஸ். தினகரன், திருமதி மலர்விழி குமார், சன் பிராண்டு.ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் சி. வி. எம். பி. எழிலரசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.அரசு, எம். எஸ்.சுகுமார், எஸ் .ஆர் .அப்பாதுரை, மாநில இளைஞரணி துணை செயலாளர் ப. அப்துல் மாலிக், மாநகர செயலாளர் சி. கே. வி. தமிழ்ச் செல்வன், நெசவாளர் அணி ஜி .சுகுமாரன், காஞ்சிபுரம் மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ். பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, எஸ். கே. பி. சீனிவாசன், எஸ். கே. ராஜேந்திரன், எஸ். சிகாமணி, பொன். சசிகுமார், நகர செயலாளர் கே குமார், ஒன்றிய செயலாளர்கள் டிவி கோகுல கண்ணன், கெ. ஞானசேகரன், பி.எம். குமார், க. குமணன், டி. குமார், பி.சேகர், பி.எம். பாபு, சத்ய சாய், கே கண்ணன், ஜி. தம்பு, ஏழுமலை, சிற்றரசு, சரவணன், கே. எஸ். ஆர். கார்த்திகேயன், பகுதி செயலாளர்கள் எஸ் சந்துரு, சு. வெங்கடேசன், அ. தசரதன், கே. திலகர், மாநகர நிர்வாகிகள் கே. ஏ. செங்குட்டுவன், ஏ. எஸ். முத்து செல்வம், வா. ஜெகநாதன், கே. சுப்பராயன், பேரூர் செயலாளர்கள் என்.எஸ். பாரிவள்ளல், என். பாண்டியன், ஆ. சுந்தர மூர்த்தி, மோகன் தாஸ், வி. எழிலரசன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ. யுவராஜ், குணசேகரன், ஆ. செல்வி, வ. மலர்மன்னன், நாத்திகம் நாகராஜன், எஸ். மாலதி, இ. அசோகன், சி. ராதாகிருஷ்ணன், தெய்வசிகாமணி, கலியுக கண்ணதாசன், பெ.சுந்தரவரதன், கே. ஏ. இளங்கோவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் க. பால்ராஜ், பெ. மணி, டி சஞ்சய் காந்தி, ம. அருள், முருகன், எஸ். யுவராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்டக் கழக செயலாளர் க.சுந்தர் எம். எல். ஏ. தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு

தீர்மானம் 1

கழகத் தலைவர் தல்வர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு பிப்ரவரி மாதம் முழுவதும், மாநகராட்சி, நகராட்சி, ஒன்றியம், பேரூராட்சி, பகுதி, வட்டம் கிளைக் கழகங்களில், கழக நிகழ்ச்சிகள் நடத்துவது, ஏழை எளியோருக்கு நலத் திட்ட உதவிகள், இளைஞர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள், தெருமுனைக் கூட்டங்கள், கருத்தரங்கம், பட்டிமன்றம், மரக்கன்று நடுதல், அறுசுவை உணவு வழங்குதல் என்று அனைவரும் வாழ்த்திடும் வகையில் நிகழ்ச்சிகளை நடத்தி கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை எழுச்சியுடனும் கொண்டாடுவது என்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் தீர்மானிக்கிறது.

தீர்மானம் 2

தமிழ் மொழிக்கு இன்று செம்மொழி அங்கிகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. செம்மொழி அங்கிகாரம் தற்போது கிடைக்கப் பெற்ற தமிழ்மொழியைக் காக்க போராடிய வரலாறு காலத்தால் அழியாத கல்வெட்டாக இன்றும் திகழ்ந்து கொண்டிருக்கிறது. முத்தமிழறிஞர் தனது பொது வாழ்க்கைப் பயணத்தை தமிழ்மொழி காக்க இந்தியை எதிர்த்து போர்ப்பாரணி பாடியனார். அன்று முதல் தனது இறுதி மூச்சுவரையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்மொழி காக்க போராடினார். தமிழ் மொழிக்கு இன்றும் அங்கிகாரம் கிடைத்திருக்கிறது என்றால் பேரறிஞர் அண்ணா வாதாடி, போராடி பெற்றுத் தந்த நமக்கு வகுத்துக் கொடுத்த, இரு மொழிக் கொள்கை தான் இன்று நமது தாய் மொழியாம் தமிழ் மொழி உலகெங்கும் பட்டொளி வீசி பறந்து கொண்டிருக்கிறது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் ஊட்டி வளர்த்த தமிழ்மொழியானது இன்றும் மங்கா தமிழ்யாக, செம்மொழியாக நம் அனைவரின் நெஞ்சங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறது.

இப்படி நமது அன்னை தமிழ்மொழியைக் காக்க, ஆதிக்க இந்தியை எதிர்த்து தங்கள் தேக்கு மர தேகத்தை தீயின் கோர நாக்குகளுக்கும், நஞ்சருந்தியும் உயிர்த் தியாகம் செய்த மொழிப்போர் தியாகிகளை நம்மால் தான் மறக்க முடியுமா? அவ் வீரர்களுக்கு வீரணக்கம் செலுத்தும் நாளாகத் தான் ஜனவரி 25 ஆம் நாள் அன்று தி.மு.கழகம் தமிழ்நாடு முழுவதும் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக் கூட்டங்களை நடத்தி வருகிறது.

அதன் படி வருகிற ஜனவரி 25 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை அன்று மொழிப் போர் தியாகிகள் வீரவணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டம் நமது காஞ்சிபுரத்தில் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று உரை நிகழ்த்துகிறார்.

இம் மாபெரும் வீர வணக்க நாள் பொதுக் கூட்ட நிகழ்ச்சியில் நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் 50 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பங்கேற்பதென தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் 3

தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழறிஞர்களை சிறப்பிக்கும் வகையில் 2026 ஆம் ஆண்டுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியில் பேரறிஞர் அண்ணா விருது கழக பொதுச் செயலாளர் மாண்புமிகு நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, பொன்னாடை அணிவித்து சிறப்பித்தார். இதனை காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சார்பில் பொதுச்செயலாளர் அவர்களுக்கு பாராட்டுகளையும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.